Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

DATE: 05.06.2026

Case No : Crl.M.P.No.467/2026

Deposition of Witness : Witness No.2

| | |
|---|---|
| Name : வசந்த் | Father/Husband Name : லிங்கதுரை |
| Age : 27 | Village : சாலைப்புதூர் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : வழக்கறிஞர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 05.06.2026

**மனுதாரர் தரப்பில் 2 ஆவது சாட்சியின் முதல் விசாரணை :-**

1. நான் தற்போது மேலப்பாளையத்தில் குடியிருந்து வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய சொந்த ஊர் சாலைப்புதூர் ஆகும். ம.சா.1 என்னுடைய அப்பா ஆவார். செல்வராஜ், தெய்வக்கனி, சுவிவர்ணன், இளவரசி ஆகியோர்களை தெரியும். என்னுடைய உறவினர்கள் ஆவார்கள்.

2. கடந்த 21.10.2024 ஆம் தேதி எங்களுடைய சொந்த ஊரில் உள்ள எங்களுடைய வீட்டில் பராமரிப்பு பணி செய்வதற்காக காலை சுமார் 11.00 மணியளவில் நான் மற்றும் என்னுடைய அண்ணன் ஐகோர்ட் ராஜா, இன்பரசன், கொத்தனார் பால்குட்டி, கையாள் திவாகர், கையாள் அங்காள ஈஸ்வரன் ஆகியோர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது 1 ஆவது எதிரி சுமார் 1.00 மணியளவில் அவருடைய ஸ்கார்பியோ காரில் வந்து இது என்னுடைய வீடு, இங்கு நீ எதுவும் கெட்டக்கூடாது என்று கூறினார், மேலும் தேவடியா மகனே என்று அவதூறான வார்த்தைகளால் பேசினார். அதன்பிறகு கம்பை எடுத்து அடித்தும், கல்லை எடுத்தும் எறிந்தார். பின்பு கூலிப்படையை வைத்து உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என என்னையும், எனது அண்ணன்கள் இருவரையும் பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார். பின்பு நாங்கள் சண்டை எதுவும் வேண்டாம் என்று வீட்டிற்கு திரும்ப வந்துவிட்டோம். பின்பு 1 ஆவது எதிரி எங்கள் மீது தட்டார்மடம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். தற்போது அந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எதிரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து எங்கள் உயிருக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 17:54:09 +0530

Judicial Magistrate, Sathankulam.